ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 2.4 – வெண்ணெய்யளைந்த

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2.4 – வெண்ணெய்யளைந்த

‡ வெண்ணெய் அளைந்த குணுங்கும் ⋆
விளையாடு புழுதியும் கொண்டு ⋆
திண்ணென இவ்விரா உன்னைத் ⋆
தேய்த்துக் கிடக்க நானொட்டேன் ⋆
எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு ⋆
இங்கெத்தனை போதும் இருந்தேன் ⋆
நண்ணல் அரிய பிரானே ! ⋆
நாரணா ! நீராட வாராய் ॥ **2.4.1** ॥

கன்றுகள் ஓடச் செவியில் ⋆
கட்டெறும்பு பிடித்திட்டால் ⋆
தென்றிக் கெடுமாகில் ⋆
வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன் ⋆
நின்ற மராமரம் சாய்த்தாய் ! ⋆
நீ பிறந்த திருவோணம் ⋆
இன்று நீ நீராட வேண்டும் ⋆
எம்பிரான் ! ஓடாதே வாராய் ॥ **2.4.2** ॥

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு ⋆
பின்னையும் நில்லாதென் நெஞ்சம் ⋆
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி ⋆
அழைக்கவும் நான் முலை தந்தேன் ⋆
காய்ச்சின நீரொடு நெல்லி ⋆

கடாரத்தில் பூரித்து வைத்தேன் ⋆
வாய்த்த புகழ் மணிவண்ணா ! ⋆
மஞ்சனம் ஆட நீ வாராய் || **2.4.3** ||

கஞ்சன் புணர்ப்பினில் வந்த ⋆
கடிய சகடம் உதைத்து ⋆
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச ⋆
வாய் முலை வைத்த பிரானே ! ⋆
மஞ்சளும் செங்கழு நீரின் ⋆
வாசிகையும் நாறு சாந்தும் ⋆
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் ⋆
அழகனே ! நீராட வாராய் || **2.4.4** ||

அப்பம் கலந்த சிற்றுண்டி ⋆
அக்காரம் பாலில் கலந்து ⋆
சொப்பட நான் சுட்டு வைத்தேன் ⋆
தின்னல் உறுதியேல் நம்பி ! ⋆
செப்பிள மென்முலை யார்கள் ⋆
சிறு புறம் பேசிச் சிரிப்பர் ⋆
சொப்பட நீராட வேண்டும் ⋆
சோத்தம் பிரான் ! இங்கே வாராய் || **2.4.5** ||

எண்ணெய்க் குடத்தை உருட்டி ⋆
இளம் பிள்ளை கிள்ளி யெழுப்பி ⋆
கண்ணைப் புரட்டி விழித்துக் ⋆
கழகண்டு செய்யும் பிரானே ! ⋆
உண்ணக் கனிகள் தருவன் ⋆
ஒலிகடல் ஓத நீர் போலே ⋆

வண்ணம் அழகிய நம்பீ !⋆
மஞ்சனம் ஆட நீ வாராய் ‖ **2.4.6** ‖

கறந்த நற் பாலும் தயிரும்⋆
கடைந்துறிமேல் வைத்த வெண்ணெய்⋆
பிறந்ததுவே முதலாகப்⋆
பெற்றறியேன் எம்பிரானே !⋆
சிறந்த நற்றாய் அலர் தூற்றும்⋆
என்பதனால் பிறர் முன்னே⋆
மறந்தும் உரையாட மாட்டேன்⋆
மஞ்சனம் ஆட நீ வாராய் ‖ **2.4.7** ‖

கன்றினை வால் ஓலை கட்டிக்⋆
கனிகள் உதிர எறிந்து⋆
பின் தொடர்ந்தோடி ஓர் பாம்பைப்⋆
பிடித்துக் கொண்டாட்டினாய் போலும்⋆
நின் திறத்தேன் அல்லேன் நம்பி !⋆
நீ பிறந்த திரு நல் நாள்⋆
நன்று நீ நீராட வேண்டும்⋆
நாரணா ! ஓடாதே வாராய் ‖ **2.4.8** ‖

பூணித் தொழுவினில் புக்குப்⋆
புழுதி அளைந்த பொன்மேனி⋆
காணப் பெரிதும் உகப்பன்⋆
ஆகிலும் கண்டார் பழிப்பர்⋆
நாண் எத்தனையும் இலாதாய் !⋆
நப்பின்னை காணில் சிரிக்கும்⋆

மாணிக்கமே ! என் மணியே ! ⋆
மஞ்சனம் ஆட நீ வாராய் ‖ **2.4.9** ‖

‡ கார்மலி மேனி நிறத்துக் ⋆
கண்ண பிரானை உகந்து ⋆
வார்மலி கொங்கை யசோதை ⋆
மஞ்சனம் ஆட்டிய ஆற்றை ⋆
பார் மலி தொல் புதுவைக் கோன் ⋆
பட்டர் பிரான் சொன்ன பாடல் ⋆
சீர் மலி செந் தமிழ் வல்லார் ⋆
தீவினை யாதும் இலரே ‖ **2.4.10** ‖

அடிவரவு — வெண்ணெய் கன்றுகள் பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார்மலி பின்னை

வெண்ணெய்யளைந்த முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்